# எழுத்தாணி

பல்சுவை இதழ்

ஜீலை இதழ்-07 2012




ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஊடகவியலாளனுக்கு பல்துறையாற்றல் வேண்டும்



'இதழியல்' என்ற சொற்பதம் இன்று பல்வேறு அர்த்தங்களைத் தந்து நிற்கின்றது. பத்திரிகைகள் மக்கள் குரலாகவும் ஆட்சியாளர்களின் குரலாகவும் ஆண்டாண்டு காலமாக பணி செய்து வந்திருக்கிறதான சூழலில் தொழில் நுட்பத்தில் புரட்சியினூடான வளர்ச்சி பெரும் மாற்றத்தை உண்டு பண்ணி வந்திருக்கிறது. சமூகமாற்றம், உலக அரசியல் மாற்றம், அரசுகளின் பலம் சார்ந்த போட்டிகள், யுத்தங்கள் போன்றவற்றினூடாக பல்வேறு துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி இதழியல் துறையிலும் ஏற்பட்டு மிகப் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதன் பயனாக இன்று பாரம்பரிய ஊடகங்கள், புதிய ஊடகங்கள் என்ற பெரும் வேறுபாடு பற்றிப் பேசப்படுகின்றது. நிறுவன மயமாக மையப்பட்டு நின்ற இதழியல் துறை இன்று தனிநபர் சார்ந்ததாக மையம் கொள்கின்றது. சாதாரண பொதுமகன் ஒவ்வொருவருக்கும், தான் அறிந்த விடயங்களை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. கணப் பொழுதுகளில் தகவல்களை பகிர்ந்து கொள்ள முடிகிறது.

இவையெல்லாம் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் சாத்தியமாகியிருக்கிறது. இப்போது பாரம்பரிய ஊடகங்களும் புதிய ஊடகமும் ஒன்றோடு ஒன்று கொடுத்து வாங்கி ஒன்றறக்கலந்து நிற்கின்றது. ஊடக அறிவுப் புலமையில்லாதவர்கள் இதழியலாளராக முடியும்? என்ற நிலை காணப்பட்டாலும் தொழில்சார் ஊடகவியலாளனின் தேவை உணரப்பட்ட வண்ணமே உள்ளது.

ஊடகப்பணியில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவரிடமும் பல்லாற்றல் வேண்டப்படுகின்றது எனலாம். எழுதுவது தொடக்கம் தட்டச்சு செய்து பக்கம் வடிவமைத்தல் வரை தெரிந்தாக வேண்டும். புகைப்படங்களை எடுப்பதற்கும், ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு செய்வதற்கும் எடிட்டிங் செய்வதற்கும் தெரிய வேண்டும். மொழிசார்ந்த அறிவும் பல்துறை சார்ந்த புலமையும் சிறந்த தொடர்பாடல் திறனும் அவசியமாகின்றது. இதற்காக பயிற்சியும் கல்வியும் தேவையென்ற நிலை வளர்ந்த நாடுகளில் பல தசாப்தங்களுக்கு முன்னமே உணரப்பட்டு செயல் வடிவம் பெறத் தொடங்கியிருந்தது.

ஆனால் தமிழ் இதழியல் துறையில் இதழியலைக் கற்றறிந்து பணி செய்யும் நிலைமை கடந்த பத்தாண்டுகளாகவே வளர்ச்சியடைந்து வந்துள்ளது எனலாம். முயன்று தவறலாக இதழியல் துறையில் பணியாற்றிய நிலைமைகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. ஊடகத்தை படிப்பதற்கு பலர் முன்வருகிறார்கள். ஏற்கனவே பணி செய்கின்றவர்கள் தம்மறிவை விருத்தி செய்ய விரும்புகிறார்கள். ஊடக நிறுவனங்கள் ஊடக கற்றறிந்தவர்களை வேலைக்கமர்த்த ஆர்வமாக உள்ளன.

இலங்கை, வடபுலம் யாழ்ப்பாணத்தில் கடந்த பத்தாண்டுகளாக ஊடகத்துறையில் பயிற்சியளித்தல் தேவையை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் முழு நேர டிப்ளோமா கற்கின்ற இரண்டாமாண்டு மாணவர்கள் தமது பயிற்சிக்காக இந்த இதழை வெளியிடுகிறார்கள். இதழியல் துறையில் மேலும் இவர்கள் வளர்ச்சி பெற இது அவர்களுக்கு ஒரு அனுபவமாக அமையும்.

தே.தேவானந்த்,
இயக்குனர், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

# எழுத்தாணி

இதழ் - 07

யாழ். பல்கலைக்கழக ஊடக மைய மாணவர்களின் பயிற்சி இதழ்


**ஆசிரியர் குழு**
மறீன் தர்மிலா.ஜெ
துவாரகி.நா
பா.கஸ்ரோ
சி.ஜனகன்

**நிர்வாக ஆசிரியர்**
தே.தேவானந்த்

**ஆலோசனை,வழிகாட்டல்**
ஆ.சபேஸ்வரன்

**பக்க வடிவமைப்பு**
மறீன் தர்மிலா.ஜெ
துவாரகி.நா
பா.கஸ்ரோ
சி.ஜனகன்

**ஆக்கங்கள்**
வித்தியா.இ
துவாரகி.நா
மறீன் தர்மிலா.ஜெ
சி.ஜனகன்
பா.கஸ்ரோ

**வெளியீடு**

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம். (MRTC)
84, ஜீம்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0212229873
Email: directormrtc@gmail.com


## உள்ளே..

பக்கங்கள்


1.மலர்ந்தும் மலராத வாழ்வு 04

2.மொழி கடந்த அச்சுறுத்தல்கள் 06

3.முடிவினைத் தேடி 07

4.ஊடகங்களும் மறைக்கப்பட்ட பக்கங்களும் 09

5.தினப் பத்திரிகை விற்றால்தான் தினசரி உணவு 11

6.நிரம்பியும் நிறையாத இடைவெளிகள் 13

7.என்னடா உலகம் எத்தனை கலகம் 15

8.நம்ப முடியாத உண்மை 16

9.தமிழ் இதழியல் துறையில் பெண்களின் பங்கு 17

10.வண்ணங்களாகிய எண்ணங்கள் 20


11.ஊர்காவற்துறை கடற்கோட்டை 22

12.நிர்க்கதியாகிய அன்னை 24

13.கண்டு கொள்வார்களா? 25

14.விரலுக்கேற்ற வீக்கம் 26

15.யாழ்ப்பாணக் கள்ளு 'மிச்சம் நல்லம்' 29






# மலர்ந்தும் மலராத வாழ்வு

"எப்படி இருந்த கிராமம் புள்ளையல் இப்ப இருக்கிறத பாத்தா வயிறு பத்தியெரியுது" என்றார் மறவன்புலோ கிராமத்தில் வசிக்கும் ஐந்து பிள்ளைகளின் தாயாரான வதனி.

சாவகச்சேரி மறவன்புலோ உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட கிராமம். வீடுகளை சுற்றிலும் வயல் நிறைந்தது. கிராமத்தினுள் இறங்கியதும் கிராமத்து நிழல் வயல் வெளிகளிலேயே தெரிந்தது. கிராமத்தினுள் நுழைவதற்கே பெரும் சிரமம். போக்குவரத்து என்பது இங்குள்ள பெரும் பிரச்சினை. அதனைப் போகும் போதே நாம் புரிந்து கொண்டோம்.

வயலுக்கு நடுவே இருந்த கிணற்றில் உடைகளை அலசியபடி வயது முதிர்ந்த தாயொருவர் நிற்பதைக்கண்டதும், அவ்விடத்திற்குச் சென்று அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். தொலைவில் தெரிந்த புதிதாக அமைக்கப்பட்டிருந்த தன் வீட்டைக் காட்டியவாறு "இதுதான் புள்ளையல் என்ர வீடு. இந்த வீட்டுல ஒத்தையாளாத்தான் இருக்கிறன். என்ர புள்ளையலுக்கு இங்க வந்திருக்க கொஞ்சமும் புடிப்பில்ல. அதுகளும் என்னெண்டுதான் வந்திருக்குங்கள். இங்க தொழிலும் இல்லை. தொழிலுக்கு வெளியில போறத்திற்கு வசதியும் இல்ல" என்றார் அந்தத் தாய். சுவிஸ் தன்னார்வுத் தொண்டு நிறுவனத்தால் (SDC) இங்கு வீடுகள் பல புதிதாக அமைத்து கொடுக்கப்பட்டிருந்தன. அதில் ஒன்றுதான் இந்தத் தாயின் புதிய வீடு.

சொந்தமாக வயல் நிலம் இருந்தும் அதனை விதைத்து பயன் பெறுவதற்கு இயலாதவள் ஆனாலும் தன் சொந்த மண்ணில் மீளக்குடியேறிய மகிழ்வுடன் இருக்கிறாள். தான் பெற்ற பிள்ளைகள் தன்னோடு



இல்லாவிட்டாலும் தன் சொந்த மண்ணில் வாழ்வதையே சுகமாக நினைக்கிறாள்.

அதே இடத்தை சேர்ந்த இன்னொருவருடன் கதைத்த போது அவர் முன்வைத்த பிரச்சினை போக்குவரத்து பிரச்சினை. இவருக்கு நான்கு பிள்ளைகள். அவர்களில் இரண்டு பேர் சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் மற்றைய இருவர் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்திலும் கல்விகற்று வருகின்றனர். சாவகச்சேரிக்கு பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் போக்குவரத்து பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர். அரச பேரூந்து பாடசாலை நேரம் காலை ஏழுபதினைந்திற்கு மாத்திரமே காலையில் செல்கின்றது. இதனைத் தவறவிடும் பட்சத்தில் அன்றைய தினம் ஒன்றில் பாடசாலை செல்லாது நிற்பதும் அல்லது நீண்டதூரம் நடந்து சென்று பேரூந்தை பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். அத்தாய் கூறும் போது "சீசன் ரிக்கற்ல போறதென்றால் பரவால, நெடுக பஸ்சுக்கு காசு கொடுக்க வசதியா இருக்கு? நாங்கள் அன்றாடம் காயச்சிகள்" என்றார். ஏறும் எரிபொருள் விலையேற்றத்திற்கும் அத்தியாவசிய பொருள் விலையேற்றத்திற்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையில் இவர்களது குடும்பம் அல்லாடிக் கொண்டு இருக்கின்றது. இதுபோன்று மீளக்குடியேறிய அநேகர் வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்ய எத்தனை துன்பங்களை எதிர் நோக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இவர்களோடு பேசிய பின் இன்னுமொரு குடும்பப் பெண்ணை சந்திக்க முடிந்தது. பத்துவயதுப் பெண் குழந்தை உடன் தட்டந்தனியே வசிக்கிறாள் தன்னிலையை எண்ணிக் குமுறினாலும் தனியே தன் பெண்ணை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற வெறியோடு வாழ்கிறாள். சிரட்டைக் கரி எரித்து விற்று கால்வயிறும் அரைவயிறுமாக காலத்தை ஓட்டுகிறாள். தன்னார்வுத் தொண்டு நிறுவனத்தால் அமைத்து கொடுக்கப்பட்ட வீடு பாதியே முடிவடைந்த நிலையில்

மீதியை எப்படிக் கட்டி முடிப்பதென்று ஏங்கிக் கொண்டு இருக்கிறாள். இது ஒருபுறம் இருக்க அவள் மகள் வசதியின்மை காரணமாக தினமும் நடந்தே பாடசாலைக்குச் செல்கிறாள். காலையில் பசித்த வயிறுடன் எவ்வளவு தூரம் தான் அவளால் நடந்து செல்ல முடியும்? இவ்வாறாக இங்கு குடியேறிய ஒவ்வொரு குடும்பமும் போக்குவரத்துப் பிரச்சினையை முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் ஒவ்வொருவரதும் அன்றாட செயற்பாடுகள் பாதிப்படைந்து வருகின்றன. எனவே இக்கிராமத்தவர்களதும் மாணவர்களினதும் நலம் கருதி இவர்களுக்குரிய ஒழுங்குகளை உரியவர்கள் செய்து கொடுப்பார்களானால் மறவன்புலோ மலர்வதற்கு வாய்ப்புண்டல்லவா?

துவாரகி நா

மூன்று தசாப்த காலமாக இந்த நாட்டில் இடம் பெற்ற போர் முடிவுக்கு வந்து விட்டது என்று பலர் மார் தட்டிப் பேசிக் கொண்டிருக்கையில் மழை விட்ட போதிலும் தூறல் ஓயவில்லை என்பது போல போருக்குப் பின்னரான மக்களின் இன்றைய வாழ்வாதார, பொருளாதார நிலைகள் என்பன மக்கள் முன்னே பரந்து கிடக்கின்ற சவால்களாகும். இந்த சவால்கள் மக்களுக்கு மாத்திரம் இன்றி ஜனநாயக நாட்டின் நான்காவது தூண் ஊடகத்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

# மொழி கடந்த அச்சுறுத்தல்கள்

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஊடகத்துறை மாணவர்களுக்கும் கொழும்பு ஊடகவியல் கல்லூரி மாணவர்களுக்கும் இடையில் ஒருநாள் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த கலந் துரையாடலின் இறுதிப் பகுதியில் முக்கியமான ஒரு விடயம் பற்றி ஆராயப்பட்டு மாணவர்களின் கருத்துக்களும் அங்கு வெளிப்படுத்தப்பட்டன.

அந்தவகையில் போர் நிறைவுக்கு வந்ததை அடுத்து தற்காலத்திலும் ஆறு மாதங்களுக்கு பிற்பட்ட காலப்பகுதியிலும் இரண்டு வருடங்களுக்கு பின்னரான நிலையிலும் ஓர் ஊடகவியளாலன் என்ற ரீதியில் நீங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள், சிக்கல்கள், முரண்பாடுகளை தீர்ப்பதில் எழும் குழப்பங்கள் என்பன தொடர்பாக ஒவ்வொரு ஊடக மாணவர் களிடமும் கேள்விகள் எழுப்பப்பட்டது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், வடபகுதி ஊடகவியலாளர்களும் தென்பகுதி ஊடகவியலாளர்களும் எதிர் கொள்ளும் சிக்கல்களே இங்கு மறைமுகமாக முதன்மைப்படுத்தப்பட்டது. ஒப்புநிலையில் பார்க்கும் போது எல்லோருடைய கருத்துக்களும் ஒன்றுபட்டதாகவே இருந்தன.

அதே வேளை வட, தென்பகுதி ஊடகவியல் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பொதுவாக நோக்குகையில் மொழிப்பிரச்சனை, பாதுகாப்பு அச்சுறுத்தல், செய்திகளை சேகரிக்கும் போது பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறல் வேண்டும் என்பன அவர்களின் கருத்துகளாக வெளிப்பட்டன.

மேலும் ஊடகவியலாளருடன் தொடர்பு கொள்வதில் உள்ள சிக்கல்களை அறிதல், உண்மையை அறிந்து கொள்வதில் உள்ள பிரச்சினை, கலாசாரம் பற்றி அறிய வாய்ப்புகள் கிடைக்காமை, அரசியல் தலையீடு, போன்ற வெளிப்பாடுகள் அவர்களின் சிந்தனைகளாக அமைந்தன.

இவை மட்டுமன்றி தகவல்களை பெற்றுக் கொள்ள இயலாமை, களத்திற்குச் சென்று செய்திகளை சேகரிக்க முடியாமை, செய்திகள் அரசியல் கட்சி சார்ந்ததாக இருப்பின் அது தணிக்கை செய்யப்படல், பாதிக்கப்பட்டோர் தமது பாதுகாப்பு கருதி தகவல்கள் தராமை, என்பன ஒருமித்த கருத்துகளாக அங்கு ஏகோபித்தன. ஆகவே ஒட்டுமொத்தத்தில் சிங்கள, தமிழ், முஸ்லீம் ஊடகவியளாலாளர்கள் தம் சவால்களும் பிரச்சனைகளும் அவற்றுக்கு முகம் கொடுக்கின்ற விதங்களும் இவர்கள் வெளிப்படுத்திய முறைகளில் இருந்து புலனாகின்றது.



பா.கஸ்ரோ

**'என்ன தான் பேனாக்கள் வாள்முனையை விடக் கூர்மையானவை என்று கூறப்பட்டாலும், துப்பாக்கிகள் இன்னமும் பேனாக்களையும், ஒலிவாங்கிகளையும், கமெராக்களையும் குறி வைத்த வண்ணமே உள்ளன.'**




எதிர்பார்த்து சென்றதொன்று எதிர்பாராமல் கிடைத்ததோ சில. கிராமமே 86 குடும்பங்களைத்தான் கொண்டுள்ளது. அப்படியிருக்க என்னதான் இவர்கள் கோரிக்கை..???

யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுதான் காக்கை தீவு. J/133 கிராமசேவையாளர் பிரிவினை கொண்டமைந்துள்ள ஒரு மீனவக் கிராமம்.

இதற்கு அடையாளம் காட்டியது மீனின் வாடை. பரபரப்புடன் காணப்பட்ட மீன் சந்தை. அங்கிருந்து குடியிருப்பு பகுதிக்குள் பிரவேசித்தோம். சற்றுத்தூரம் சென்றதும் ஒரு குளம் ஊதா நிறமாக வற்றிப்போய் காணப்பட்டது. அருகிலேயே ஒரு சிறு குடிசை வெளியில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் சென்றோம். அவர் மீனவ சங்கச் செயலாளர் கஜேந்திரன். அவரிடம் கேட்ட போது. இது வழமைதான் இப்ப இக்குளம் ரொம்ப வற்றியதால இப்படி இருக்கு. மாரிகாலத்தில நாங்க இதில இருக்க முடியாது மாரி நேரத்தில் அதிக மழையால் இக்குளம் நிரம்பி எங்கட வீட்டுக்குள்ள எல்லாம் தண்ணி வந்திடும் நாங்க அந்நேரம் பக்கத்தில இருக்கிற பாடசாலைல போய் தங்கிட்டு வருவோம் அப்படியான சமயம் எங்கபாடு கஷ்ரம்தான் என்றார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஐம்பது லட்சம் செலவில் 2004ஆம் ஆண்டு வாய்க்கால் அமைத்துத் தந்தது. யசாக் நிறுவனமும் பத்து லட்சம் செலவில் ஒரு பக்க அணைக்கட்டை அமைத்துத்தந்நது. ஆனாலும் இப் பிரச்சினை தீரவில்லை என்றார். இதற்கு தீர்வு என்ன என்று கேட்ட போது இதற்கு ஒரே தீர்வு இப் பள்ளமான பகுதியை நிரப்புவதுதான் என்று அது தீராது என்றதைப்போலவே கூறி முடித்தார்.

தொடர்ந்து உள்ளே சென்றோம் தண்ணீர்க் குழாயின் அருகில் சுமார் இருபத்தைந்து தண்ணீர் கலன்களுக்கு மேலாக காணப்பட்டது. அது தொடர்பாக சங்கத்தலைவரிடம் கேட்ட போது இங்கு தண்ணியோ உப்பு ஏழு பொதுக்கிணறு உள்ளது இருப்பினும் அதில் ஊற்று குறைவு இந்த தண்ணீர் தொட்டியும் UNDP கட்டித் தந்துள்ளது. ஆனால் ஞாயிற்றுக்கிழமையில் தண்ணி வராது. அத்துடன் ஒரு குடும்பத்திற்கு முப்பத்தைந்து லீற்றர் தான் தண்ணி" என்றும் கூறினார். இடையில் ஒருவர் இதவிட இங்க ஒரு பெரிய பிரச்சனை இருக்கு வாங்கோ காட்டுறன் என கூறி சிறிது தூரம் அழைத்துச் சென்றார்.

சற்றுத்தூரம் வந்ததும் அதோ அதுதான் மயானம் என்றார். நடைமுறையில் இல்லாத சம்பவம் குடியிருப்பு பகுதிகளுடன் மயானமா? அதுவோ உடைந்த சுவர் ஒருபுறம் புதிதாக


அமைக்கப்பட்டு பாதியில் நிற்கும் மீதிச்சுவர். நான்கு கம்பிகளில் ஒரு தகரம் மட்டும் தொங்கிய படி காணப்பட்டது. அப்போது எம்மை அழைத்துச் சென்றவரோ "இதோ இந்த வீட்டதான் தலை கிடந்தது" என்று மயானத்தில் முன்னால் உள்ள வீட்டை காட்டினார்.

பயமோ ஒருபுறம். என்ன என்று கேட்ட போது "ஒருநாள் விடியற்கால 5மணிக்கு இந்த வீட்டு பொம்பிள கத்திக் கொண்டு ஓடி வந்தா என்ன என்று கேட்டபோது வாசலில் தலை கிடக்குது எண்டாங்க, போய்ப் பார்த்த போது வாசலில் பாதி எரிஞ்சபடி நாய்கள் கொண்டுவந்து போட்டிருக்கு. இதற்கு காரணம் இங்கு ஒழுங்கான பாதுகாவலரும் இல்லை. இங்க பல விதமான நோயாளிகள் வயதானவங்க எண்டு கொண்டு வந்து தகனம் பண்றாங்க, பக்கத்து ஊர்க்காரங்களும் இங்கு தான் தகனம் பண்றாங்க. ஆனால் தகனம் செய்துவிட்டு சென்றுடுவாங்க, அது பாதியில் அணைந்துவிடும். அப்போ இங்குள்ள நாய்கள் அதை கொணர்ந்து இப்படி எங்காவது போட்டிடும். இப்படிதான் அங்கால ஒரு வீட்டிலும் காலும் கிடந்தது. தகனம் பண்ணும் போது அதால வாற மணம் தாங்க முடியாது, இருக்கவே முடியாத அளவிற்கு இருக்கும்" என்று அருவருத்தவாறே கூறினார்.

இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா என்று கேட்ட போது "இது பற்றி பல முறை முறைப்பாடு செய்திட்டம். ஆனால் அரசாங்கம் ஏதும் செய்யுறதா இல்லை. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தனது மகனின் உடலை இங்கு அடக்கம் பண்ணியதால இப்ப இந்த சுவர் கட்டித் தந்தாங்க" என்று கூறினார்.

எங்களுக்கென்று இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு மயானம் இருக்கு ஆனாலும் அந்த சனமும் அது தூரம் என்று இங்க தகனம் பண்றாங்க, இதால எங்களுக்குத்தான் கஷ்ரம். இதற்கு முடிவு வேணும் என்று தெரிவித்தார். இதுவரை எவரும் இப்படி ஒரு பிரச்சனை இருப்பதை அறிந்திருக்க மாட்டார்கள் என்று கூறினார். உண்மைதான் எதிர்பாராத விதமாய் அமைந்தது. மீனவ கிராமம் என்ற அது தொடர்பான பிரச்சினையினை எதிர்பார்த்துச் சென்ற எமக்கு எதிர்பாராத விதமாய் வியப்பினைக் கொடுத்தது இங்குள்ள பிரச்சினை.

ஒரு மனிதனுக்கு தேவையானது உணவு, உடை, தங்குமிடம். அதில் இவர்களுக்கு பெரும் இடராக அமைந்தது தங்குமிடம். வெள்ளம் ஒரு புறம் மயானம் ஒருபுறம் நடுவில் குடி நீர் போராட்டமும் இவற்றுக்கு நடுவில் திணறும் காக்கைதீவு மக்கள் இதற்கான முடிவைத்தேடி..






# ஊடகங்களும் மறைக்கப்பட்ட பக்கங்களும்

சமூகத்தில் ஊடகத்தின் பங்கு உன்னதமானது. மக்களின் தகவல் அறியும் உரிமைக்கு தகவல்களை உள்ளதை உள்ளவாறே மக்களிடம் சேர்ப்பதே ஊடகங்களின் சிறப்பியல்பாக அமைகின்றது. ஆனால் இன்று ஊடகங்களுக்கு ஏற்பட்ட வரையறைகள், தடைகள், உண்மைச் செய்திகளை மக்கள் மத்தியில் சேர்ப்பதற்குத் தடையாக மாறியுள்ளன. உண்மையை உரக்கக் கூறி வந்த ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் மௌனித்து நிற்க வேண்டிய சூழல் தற்போது ஏற்படுகின்றது.

தணிக்கைகள் ஊடகத்தில் வேண்டியவைதான். பெண்கள், சிறுவர்கள், தற்கொலை, பலாத்காரம், முதலிய விடயங்களை அறிக்கையிடும் போது சுய தணிக்கைகள் அவசியமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்- கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இன்று உண்மையான பக்கங்களை மறைப்பதற்கு செய்தித் தணிக்கை என்பது ஒரு ஆயுதமாக பயன்படுத்தப் பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவை தவிர உயிர், உடமைகள் மீதான அச்சுறுத்தல்களும் மறைக்கப்பட்ட பக்கங்களின் உருவாக்கத்தின் பின்னணியில் உள்ளன. உண்மையை வெளிப்படுத்தி நின்ற ஊடகவி யலாளர்கள் கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல் மற்றும் இதரபல அச்சுறுத்தல்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றனர்.

*ஊடகம் என்பது மாபெரும்
சாட்சியம்.
ஒடுக்கப்பட்ட மக்கள்,
அவர்கள் சார்ந்த
அழிவுகள், ஒடுக்குமுறைகள் பற்றிய
செய்திகள், படங்கள்
முதலியன ஒரு
ஊடகத்தினால் வெளியிடப்படும் போது
அவை சர்வதேச அரங்கில்
சாட்சியங்களாக மதிக்கப்படுகின்றன.*

இதனால் உண்மைகளும் அவர்களுடனேயே உறங்கி விடுகின்றன.


உண்மைகளை வெளியிடாமை என்பதை விட அவற்றை திரித்து கூறுவது என்பது மோசமானது. இது மக்கள் மத்தியில் ஊடகங்கள் மீதான விமர்சனங்களையும் திருப்பி விடுகின்றது. அத்துடன் உண்மைகளையும் மறைத்து விடுகின்றன.

முறையான தேடலின்மை, மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்ற எண்ணமின்மை, செய்தியினை ஆராயும் திறன் குறைவு, செய்தி மூலங்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்யாமை என பல்வேறு அம்சங்கள் ஒரு ஊடகவியலாளன் மறைக்கப்பட்ட பக்கமொன்றை உருவாக்க காரணிகளாக அமைகின்றன.

அவ்வாறு வெளிப்படுத்தினால் தலைமறைவு வாழ்வை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றோம். எதிர்கால ஊடக சமூகத்தால் இந்த நிலை முழுமையாக மாற்றப்பட வேண்டும்.

விதைப்பது நம் கடமை. இன்று விதைப்போம், பழம் என்றோ ஒரு நாள் யாருக்கோ கிடைக்கும், ஆகவே விதைப்போம்.. எம்மைப் பார்த்து ஆயிரம் பேர் விதைக்க ஆரம்பிக்கலாம்.

சி.ஜனகன்




ஊடகம் என்பது மாபெரும் சாட்சியம். ஒடுக்கப்பட்ட மக்கள், அவர்கள் சார்ந்த அழிவுகள், ஒடுக்கு முறைகள் பற்றிய செய்திகள், படங்கள் முதலியன ஒரு ஊடகத்தினால் வெளியிடப்படும் போது அது சர்வதேச அரங்கில் சாட்சியங்களாக மதிக்கப்படுகின்றன. ஆனால் ஊடகங்கள் மீதான அழுத்தங்களின் காரணமாக உண்மைக்கான சாட்சியங்களான ஊடகங்கள், பொய்மையின் சாட்சியமாக மாறி விடுகின்றன, அல்லது சாட்சியங்கள் என்ற கதாபாத்திரத்தில் இருந்து விலகிக் கொள்கின்றன.

இந்த நிலை இனியும் தொடரக் கூடாது. ஊடகங்களின் மௌனித்த நிலை தொடர்வதால் எமக்கு தெரிந்த உண்மைகளை கூட வெளியுலகிற்கு வெளிப்படுத்த முடியாமல் இருக்கின்றோம்.

இன்று உண்மைக்கான சாட்சியங்களான சில ஊடகங்கள் பொய்மையின் சாட்சியமாக மாறி விடுகின்றன, அல்லது சாட்சியங்கள் என்ற கதாபாத்திரத்தில் இருந்து விலகிக் கொள்கின்றன.

படங்கள் :- www.mideastposts.com
www.tisrilanka.org

# தினப்பத்திரிகை விற்றால்தான் தினசரி உணவு

நலிந்த தோற்றம், தள்ளாடிய நடை, ஒருகையில் பை, மறுகையில் தினப்பத் திரிகைகள். வீதியோரமாய் அமர்ந்து பத்திரிகை விற்கும் எழுபத்தைந்து வயது மதிக்கத் தக்க மூதாட்டி அவள். வெளிவரும் செய்தித்தாள்களின் விற்பனையில் கிடைக்கும் பணமே அவளுக்குத் தினமும் உணவு கொடுக்கின்றது. யுத்தம் செய்த சதியினால் சொந்த ஊரான காரைநகர் விட்டு யாழ்.நகரில் குடியேறி பன்னிரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

கட்டிய கணவனை காலன் கொண்டு செல்ல ஐந்து பிள்ளைகளைப் பெற்றும் ஒரு வேளை உணவிற்கும் அடுத்தவர் கையினை எதிர்பாராது தனது உழைப்பைத் தொடரும் பரமேஸ்வரி என்பவர் தான் அப்பெண்மணி

கசிந்த கண்ணீர் துளிகளுடன் அவர் தன்னைப் பற்றிக் கூறியபோது "1995ஆம் ஆண்டு பிரச்சினையுடன் சொந்த ஊரான காரைநகர் விட்டு யாழ்ப்பாணம் வந்து விட்டோம். எனக்கு ஐந்து பிள்ளையள் இரண்டு ஆம்பிளப்பிள்ளையும் மூன்று பொம்பிளப்பிள்ளையும் எல்லாருக்கும் கல்யாணம் பண்ணி குடுத்திற்ரன்" என்று எதையோ சாதித்து விட்ட உணர்வுடன் கூறினார். சிவன் அம்மன் வீதியில் தற்போது ஒரு சிறிய வீடொன்றில் தனிமையுடன் வாழும் இவளுக்கு இவளின் பேரப்பிள்ளைகள் சில சமயங்களில் தன்னைப் பார்க்க வருவதொன்றுதான் இன்பம். அதற்காக தினமும் காத்திருப் பேன் என்று கூறும் போது பாசத்திற்கான ஏக்கம் அவளின் முகத்தில் தென்பட்டது.
"தினமும் பத்திரிகை விற்றுக் கிடைக்கும் பணத்தில் தான் சமையலுக்கு பொருட்கள் வாங்கிச் செல்வேன். பதினொரு மணிக்குப் பின்னர் தான் பத்திரிகைகள் விற்று முடியும் சில சமயம் அதுவும் பிந்தும் அதற்குப்பிறகுதான் சமையல். சில சமயம் உடம்பிற்கு ஏலாட்டி பாண் ஏதும் வாங்கி சாப்பிடுவன்" என்று தன் நிலையைக் கூறினாள். கொளுத்தும் வெய்யிலிலும் தன் உழைப்பினை மட்டுமே நம்பி தனது வாழ்வை நடத்தும் இவளுக்கு தன் வாழ்க்கை ஒரு சுமையாக இல்லை. தன்மீதுள்ள நம்பிக்கைதான் அதிகம். பிள்ளைகளைப் பெற்றும் எத்தனை வயோதிபர்கள் எத்தகைய நிலையில் நிர்கதியாய் நிற்கின்றனர். பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு துணைகளைத் தேடிக் கொடுத்து விட்டு தான் அனாதரவாய் நிற்கும் பெற்றோர் இவளைப் போல் இன்னும் எத்தனையோ பேர்.

மறீன்.ஜெ






# நிரம்பியும் நிறையாத இடைவெளிகள்..



வித்யா.இ

யாழ் அன்னையின் கடல்மடி சீராட்டும் கிராமம் மண்டைதீவு.

குடிநீர் பிரச்சினை தொடர்பான ஆய்வு ஒன்றிற்காக மண்டைதீவுக் கிராமத்திற்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. நிஜங்களை நிழல்களாக்கி கமெராவுக்குள் சிறைப் பிடித்ததோடு மக்களின் மனக் குமுறல்களையும் பதிவு செய்யதேன்.



மண்டைதீவு மக்கள் குடிநீரை பெற்றுக்கொள்வதற்கு பின்னால் மறைந்து கிடக்கும் கிக்கல்கள் மிகவும் கவலைக்கிடமானவை. அக் கிராமத்திற்குத் தேவையான குடிநீர் பெற்றுக் கொள்ளப்படுவது மூன்று நீர்த்தாங்கிகளில் மாத்திரமே. கிராமத்தின் மூன்று வேறு திக்குகளில் அமைக்கப்பட்டிருக்கும் இந் நீர்தாங்கிகளிலேயே அப்பகுதி மக்கள் நீரைப் பெற்றுக் கொள்கின்றனர். காலையும் மாலையும் நீர் தரப்படும் எனக் கூறப்பட்டபோதும் காலை மட்டுமே நீர் தாங்கிகளுக்கு வருவதாகவும் அதுவும் காலை பத்துமணியைத் தாண்டியே வருவதாகவும் அவ் ஊரைச்சேர்ந்த கமலினி என்ற பெண்மணி கூறினார். “நேரம் பத்து மணியைத் தாண்டியும் தண்ணி இன்னும் வராததால இன்னும் சமையல் வேலைகூட ஆரம்பிக்கல” என்றார் கைக்குழந்தையுடன் நின்ற பெண்ணொருவர்.

மேலும் அவ்வூர் மக்களுடன் பேசிய போது தினமும் வழங்கப்படும் குடிநீர் குறிப்பிட்ட நேரத்தோடு நிறுத்தப்படுகிறது. பலர் நீர் எடுக்காமலே திரும்பி விடுகின்றனர் என்றனர்.

ஒரு குடும்பத்திற்கு ஐந்து லீற்றர் நீரே. அதிலும் பிரச்சனை. முதலில் கொள்கலன்களை அடுக்கியவர்களா? அல்லது தண்ணீர் வரும் போது அவ்விடத்தில் நிற்பவர்களா? நீரைப்பெறுவதென்பது இவர்களுக்குள் உள்ள முரண்பாடு. ஒவ்வொரு வீட்டிற்கும் இலக்கம் வழங்கப்பட்டு அவ்வொழுங்கின்படி நீரைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் பின்னால் வரும் இலக்கத்திற்கு உரியவர்கள் சில சமயங்களில் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாது.

தண்ணீரை பெற்றுக்கொள்வதற்கு பெண்கள், ஆண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என எல்லோரும் காத்திருக்க நேரிடுகின்றது. காலையில் தண்ணீரைப் பெறவரும் சிறுவர்கள் தண்ணீர் தாமதமாக கிடைப்பதால் பாடசாலை செல்வதும் தடைப்படுகின்றது.

தண்ணீரைத் தாராளமாக பாவிக்கும் நமக்கு இவர்கள் தண்ணீருக்காக படும் கஷ்ரம் சுமையாகவே இருந்தது. அழகிய இக்கிராமத்தின் பின்னால் அடிமன எரிதல் இருக்கும் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. காலை பத்து மணிக்கு முன்னர் தவித்த வாய்க்கு தண்ணீர் எனக் கேட்டு மண்டதீவு மக்கள் இல்லை என முகம் வாடினால் எந்த முனிவராலும் சாபம் கொடுக்க இயலாது. இவ்வாறான பிரச்சனையோடு நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் எத்தனையோ கிராமங்கள்?

நான் அவ்விடம் விட்டுப்புறப்படும் போது மனதும் வெறுமையாய் நிறையாத குடங்கள் போன்





# என்னடா உலகம் எத்தனை கலக்கம்

**தாக்கங்களும் ஏக்கங்களும் புதியனவல்லவே நமக்கு. எம் நாட்டில் இடம் பெற்ற யுத்தம் என்னும் கொடூரம் கொன்று குவித்ததை விட எஞ்சியுள்ளவர்கள் படும் கஷ்ரமே சொல்லித் தீராதவை.**

யுத்தத்தில் தம் சொந்தங்களை பறி கொடுத்தவர்களும் தம் உடைமைகளை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டவர்களும் தம் உறவுகள் உயிரோடு இருக்கின்றனரா இல்லையா என்பது கூடத் தெரியாது ஏங்கித்தவித்துக் கொண்டிருக்கின்றனர். காணாமல் போன கணவர் எப்போது வருவார் என்றும் காணாமல் போன பிள்ளை மீண்டும் வருவானா? என்றும் காணாமல் போன தந்தை இன்று வருவார் நாளை வருவார் என்றும் ஏக்கத்துடக் காத்திருக்கின்றனர் நம் சொந்தங்கள்.

இவ்வாறு காத்துத் தவிக்கும் பிஞ்சொன்றை அண்மையில் சந்திக்க முடிந்தது. மறவன்புலோ சகவகலாவல்லி வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்விகற்கும் மாணவி சபீர்னா. இன்று தாயின் அரவணைப்பிலும் தாத்தாவின் வழிகாட்டலிலும் தன் கல்வியைத் தொடர்கிறாள். தந்தையில்லாமல் வளரும் பிள்ளைக்கு எந்த மனக்குறையும் இல்லாமல் வளர்த்தெடுக்க வேண்டும் என்று தாய் எண்ணினாலும் தன் தந்தைக்கு நடந்ததை அப் பிஞ்சுக்கு சொல்லாமல் இல்லை.

சபீர்னாவின் கண்களில் ஏதோ ஒரு ஏக்கத்தை காணமுடிந்தது. சிறுமியாக இருந்த போதும் தந்தையை பிரிந்த வலி அவள் வார்த்தைகளில் தெரிந்தது. "நான் சின்னப்பிள்ளையா தனங்கிளப்பில இருக்கேக்க எங்கட அப்பாவ ஆமி பிடிச்சுக் கொண்டு போட்டானாம். அதுக்குப்பிறகு அப்பா வரவே இல்ல" என்று தன் செல்லக்குரலில் கூறினாள் சபீர்னா. அவள் தந்தையைப் பற்றி மேலும் கேட்க நினைத்தாலும் அப் பிஞ்சு உள்ளம் அதனால் வருந்தி விடுமோ என்ற எண்ணமும் மனதில் ஓடியது. இருப்பினும் மெல்ல அவளிடம் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தேன். "அம்மா நெடுக அப்பாவை விசாரிக்கறதிற்கு தாத்தாவோட போறவா. போகேக்க அப்பாவ கூட்டிக் கொண்டு வரப்போறன் என்று சொல்லுவா ஆனால் வரேக்க தனியாத்தான் வருவா அப்பா வாரதே இல்ல" என்று அவள் கூறும் போது என் கண்கள் கரித்துக் கொண்டன. தன் தந்தையை எதிர்பார்த்திருக்கும் அவளின் ஏக்கம் இதனை விட சொல்லத் தேவையில்லை.

**இவளைப் போன்று இப் பாடசாலையில் நான் சந்தித்த அனேக குழந்தைகள் தந்தையை பறிகொடுத்தவர்களாகவும் பலிகொடுத்தவர்களாகவும் தமது தாயின் அரவணைப்பிலும் தமது பிற உறவுகளின் அரவணைப்பிலும் கண்களில் கனவுகளைச் சுமந்து மனதில் ஏக்கங்களை தாங்கி வாழ்ந்து வருகின்றனர். காணாமல் போனவர்கள் உயிரோடுதான் இருக்கின்றனரா? அல்லது இறந்து விட்டனரா? என்பதை அறியாமல் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு என்றுதான் விடியல் வருமோ?**




நாக பாம்பினை தெய்வமாக வழிபடும் சைவ சமய மக்கள் மத்தியில் பாம்பு வெள்ளிக் கிழமையில் வீட்டிற்கு வருவது நன்மை என்று கருதும் மக்களும் உள்ளனர்.

இத்தகைய நிலையில் ஒரு பெண்ணின் நற்காரியங்களில் கலந்து கொள்ளும் நாகத்தின் வரவு அவளுக்கு எத்தனை நன்மையானது என்பது தான் புரியாததொன்றாய் அமைகிறது.

கோண்டாவிலில் வசிக்கும் பெண்ணின் வீட்டில் அவளின் உள்ளேயே சிறு அம்மன் கோயில் அமைந்துள்ளது. இப் பெண்ணிற்கு இடம்பெறும் நற்காரியங்கள் பலதில் இந்நாகம் கலந்து கொள்வதாக சொல்லப்படுகின்றது.
அண்மையில் இவரின் இருபத்தொராவது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட நாகம் இவளது திருமண நிச்சய வைபவத்திற்கும் வருகை தந்தது.
அப்போதெல்லாம் இவர்களுக்குப் புரியவில்லை இந்நாகம் இப் பெண்ணின் மகிழ்ச்சியில் பங்கேற்க வருகின்றதென்பது.

ஊர் கூடி அர்ச்சதை போட்டு நடைபெற்ற இவளின் வாழ்வின் முக்கிய தருணமான திருமணத்தின் போதும் நாகம் வந்த போதுதான் புரிந்தது. இப் பெண்ணிற்கு நடக்கும் நற்காரியங்களின் போதே இப் பாம்பு வருகின்றதென்பது.

இச்சம்பவம் ஊர் மக்களுக்கு வியப்பினைக் கொடுத்தது. ஒவ்வொரு முறையும் இப் பெண்ணின் நன்மைத்தனத்தில் இவர்களின் வீட்டோடு இருக்கும் கோயிலுக்கு வரும் நாகத்தின் வருகை அறிந்து அவள் வீட்டில் உள்ள கோயிலில் வழிபடும் மக்களும் அதிகரித்தது.
தற்போது சில நாட்களின் முன்பு வெள்ளை நாகம் இரவு வேளையில் வந்ததாக கூறுகின்றனர்.
இதற்கான காரணம் மட்டும் இன்னும் அறியப்படவில்லை என்றும் கூறுகின்றனர்.
நாகத்தின் வருகை நற்காரியம் என்பார்கள் ஆனால் இன்று நாகமே நற்காரியங்களில் பங்கேற்க வருகின்றது.
இவை நம்பமுடியாத ஒன்றாய் அமைந்தாலும் நடந்தேறிய நிகழ்வுதான்.
நாகத்தின் வருகையில் நற்காரியம் மாறி நாகம் நற்காரியங்களில் பங்கேற்கின்றது.

ஷரீன்.ஜெ





இன்றைய காலகட்டத்தில் ஆண்களே பெரும்பாலும் எழுத்து துறையிலும் ஊடக துறையிலும் அதிகம் சாதித்து வருகின்றனர். அதற்கு அவர்களுக்கு என்று சமூகத்தில் இருக்கின்ற வாய்ப்புகளும் காரணமாக அமைகின்றன. ஆண் ஒருவன் சமூகத்தினை பல்வேறு கோணங்களில் பார்ப்பதற்கு தகுதியுடையவன் என பலரும் நம்புவதால் ஆண் படைப்பாளிகளை இன்று நாம் அதிகமாக பார்க்கின்றோம். ஆணுக்கு நிகரானவள் பெண் என்பது நிஜம். அதனால் எந்த துறையாக இருந்தாலும் இன்று பெண்களும் அத்துறைகளில் ஆண்களுக்கு இணையாக கோலுச்சி வருகின்றனர். அந்த வகையில் இன்று இதழியல் துறையில் சாதிக்கும் பெண்களும் பலர் உள்ளனர். அத்துடன் ஆண் இலக்கிய வாதிகள் பெண்களின் பெயர்களை தம் படைப்புகளில் புனை பெயராக கொண்டு எழுதி வருகின்றனர் என்பதன் ஊடாக பெண்கள் இலக்கிய படைப்பில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றனர் என்பதை உணர முடிகின்றதல்லவா? பெண்கள் பாரதியின் புரட்சிக்கு பின்னர்தான் சமூகத்தில் சாதிக்க வந்தனர் என்ற கருத்து ஒரு புறமிருந்தாலும் இலக்கிய துறையிலும், இதழியல் துறையிலும் பெண்கள் தமது படைப்பாற்றலை சங்க காலத்திலேயே ஆரம்பித்து விட்டனர். சென்னை பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற புத்தாக்க பயிற்சி கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியை தாயம்மாள் அறவாணன் அவர்களின் கருத்து இவ்வாறு அமைகின்றது. அவர் தனது உரையில் குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாக கொண்டு இக்கட்டுரை வடிவமைக்கப்படுகின்றது.

# தமிழ் இதழியல் துறையில் பெண்களின் பங்கு

நூல்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு வருபவரும், கொங்கு பத்திரிகையின் ஸ்தாபகராக விளங்குபவருமான பேராசிரியை தாயம்மாள் அறவாணன் அவர்கள் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும் தொடர்பியல் துறை தலைவருமாகிய பேராசிரியர் க.ப.அறவாணன் அவர்களின் துணைவியாராவார். கணவரின் இலக்கிய பயணத்திலும் கல்வி பயணத்திலும் தன்னையும் இணைத்துக் கொண்ட பேராசிரியை தாயம்மாள் அறவாணன் அவர்கள் 23 நூல்களை இதுவரை வெளியிட்டு உள்ளார்.



இவற்றில் சிலப்பதிகாரத்தில் வாய்மொழி கதை, ஔவையார் நூல் என்பன பெருமை பெற்றவையாகும். இவருடைய இலக்கிய படைப்புகளுக்காக சக்தி விருது, ஔவை விருது முதலிய விருதுகள் இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க காலம் முதல் இன்று வரை உள்ள பெண் கவிஞர்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு வரும் அவர் தனது ஆய்வினை அடிப்படையாக கொண்டு சென்னை பல்கலை கழகத்தில் தனது கருத்துரையை நிகழ்த்தினார். சங்க காலத்தில் எழுந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களில் அமைந்த பாடல்களில் பல பாடல்களை அக்காலத்தில் இருந்த பெண் கவிஞர்கள் பாடியுள்ளனர். அக்காலத்தில் சுமார் 45 பெண் கவிஞர்கள் இருந்துள்ளனர். அவர்களில் கற்றுத் தேர்ந்த புலவர்களும் இருந்தனர். சாதாரணமான பெண்களும் இருந்தனர். குறத்தி இனத்தை சேர்ந்தவர்களும், பானை செய்யும் பெண்களும், சேலை துவைக்கும் பெண்களும் கூட கவிதாயினிகளாக இருந்துள்ளனர். எடுத்துக்காட்டாக குறத்தி இனத்தை சேர்ந்த இளையோதி, குளையோதி ஆகிய பெண் புலவர்களை குறிப்பிடலாம்.

சங்க காலத்தில் கவிபுனைய ஆரம்பித்த பெண்கள் தொடர்ச்சியாக கவிபுனைவதை நிறுத்தாமல் தொடர்ந்தனர். அந்த வகையில் ஔவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள், மங்கையற்கரசியார் என ஒவ்வொரு கால கட்டத்திலும் பெண் புலவர்கள் தோன்றிய வண்ணமே இருந்தனர். இவர்கள் ஆண் புலவர்களுக்கு சவாலாகவும் அவர்களின் கவித்துவத்திற்கு இணையாகவும் பாடல்களை பாடி வந்துள்ளனர். இவர்களில் புலமைப்போரில் ஈடுபட்ட ஔவையாரை இவ்விடத்தில் நினைவுகூறுவது சாலச்சிறந்ததாகும்.



அறிய முடிந்ததாக குறிப்பிட்ட பேராசிரியை தாயம்மாள் அறவாணன் அவர்கள் அன்றைய காலத்தில் பெண்கள் சுதந்திர போராட்டத்தில் பங்கெடுத்ததால் தான் இன்றைய பெண்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர் என்று குறிப்பிட்டார். 19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் சுமார் 107 பெண் கவிஞர்கள் இருந்துள்ளனர்

பெண் கவிஞர்களின் தோற்றத்தில் அவர்களின் இளவயது திருமணங்களும் செல்வாக்கு செலுத்துகின்றன. கணவன் இறந்த பின் அப் பெண்ணின் பெற்றோர் அவளுக்கு கல்வி கற்பித்தலை ஊக்குவித்ததால் இப்பெண்கள் கல்வியில் சிறந்தவர்களாக வளர்ந்தனர். பின் சமூகத்தின் மீதான இவர்களின் பார்வை அகல விரியவே அவர்கள் கவிஞர் களாக மாறினர்.

**'19ம் நூற்றாண்டின் பெண் கவிஞர்கள் பற்றி பார்த்தால் அவர்கள் இந்திய சுதந்திர போராட்டத்தில் பெரும் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்துள்ளனர். 1909ல் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட ஆவண காப்பகத்தில் இருந்து இவர்கள் பற்றிய தகவல்களை அறிய முடிகிறது.'**

பிற்பட்ட காலத்திலே புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கவிஞர்களாக இருந்த ஜானகி அம்மையார், லட்சுமி அம்மையார் ஆகிய இருவரும் பெண் கவிஞர்களுள் முதன்மை பெறுகின்றனர். இவர்களில் லட்சுமி அம்மாள் வியாசட்டமுறையில் அதாவது ஒரு வரியில் அமைந்த விடயத்திற்கு நீண்ட தெளிவான விளக்கம் தருவது வியாசட்ட முறையாகும். அந்த வகையில் வியாசட்ட முறையில் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு தெளிவான பொருளுரை எழுதியுள்ளார். திருக்குறளுக்கு பொருளுரை எழுதிய ஒரே ஒரு பெண் லட்சுமி அம்மையார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் பெண் கவிஞர்கள் பற்றி பார்த்தால் அவர்கள் இந்திய சுதந்திர போராட்டத்தில் பெரும் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்துள்ளனர். 1909ல் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட ஆவண காப்பகத்தில் இருந்து சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற பெண்கள் பற்றிய தகவல்களை

விழுப்புரம் அகலாம்பிகை என்ற பெண் சிறுவயதிலேயே விதவையானவர். பின் இரட்டணை என்ற ஊரில் தங்கியிருந்து ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் யாப்பு நயம்பட பல்வேறு கவிதைகளை வெளியிட்டார். இவரின் சிறப்புக்குரிய படைப்பாக மகாத்மா காந்தி தொடர்பாக இவர் எழுதிய ஏழு காண்டங்களை கொண்ட நூல் விளங்கு கின்றது

பத்மாவதி, கிருஸ்ணவேணி ஆகிய சகோதரிகள் கும்மியடி க்கும் பெண்களாக விளங்கினர். இவர்களிடம் இயற்கை யாகவே கிடைக்கப்பெற்ற இசை அறிவின் காரணமாக இவர்களால் படைக்கப்பட்ட கவிதைகள் இசையோடு இணைந்து காணப்படுகின்றன. அத்துடன் சாதாரண பெண்ணாகிய சம்பூர்ணம் என்பவர் சமையல் செய்து கொண்டே தமயந்தி நாடகம் தொடர்பாக கவிதைகளை எழுதி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


மீனாட்சியம்மாள் நடேசையர்


வை.மு.கோதைநாயகி

**மலையத்தில் தேயிலை தோட்டங்களில் கஸ்டப்படும் மக்களின் உரிமைகளுக்காக கணவருடன் இணைந்து போரிட்டவர் மீனாட்சியம்மாள்.**

இவ்வாறாக பெண்கள் கவித்துறையில் சாதித்தது மட்டுமன்றி பல பெண்கள் இன்றும் ஊடக துறையில் சாதித்த வண்ணம் உள்ளனர். தமிழ் மொழியே தெரியாத வை.மு.கோதைநாயகி என்ற பெண் கணவரின் துணையோடு நின்று 15 நாவல்களை எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி 32 வருடங்கள் தொடர்ச்சியாக வெளியாகி வந்த ஜெகன்மோகினி பத்திரிகையின் ஸ்தாபகராகவும் இப்பெண் விளங்கியுள்ளார். அத்துடன் பல பெண்கள் நாடு கடந்து சென்றும் பத்திரிகை துறையில் செயற்பட்டிருக்கின்றனர். இன்றைய தமிழ் பெண் பத்திரிகையாளர்களின் கதாநாயகிகளில் முக்கியமானவர் இலங்கையின் மலையத்தில் தேயிலை தோட்டங்களில் கஸ்டப்படும் மக்களின் உரிமைகளுக்காக கணவருடன் இணைந்து போரிட்ட மீனாட்சியம்மாள் நடேசையர். இந்திய வம்சாவளி மக்களுக்காக தஞ்சை மாவட்டத்தில் இருந்து பத்திரிகைகள் ஊடாக குரலெழுப்பி வந்த நடேசையர் அவர்களை ஆங்கில அரசு தடை செய்த போது அங்கிருந்து இலங்கை வந்து மலையக வாழ் இந்திய மக்களுடன் இணைந்து வாழ்ந்து அவர்களுக்கான உரிமைகளை தேடியறிந்து அதனை பெற்றுத்தருவதற்காக பத்திரிகைகளை உருவாக்கினார்.

கணவருக்கு உதவியாக இந்தியாவில் இருந்து இலங்கை வந்து இங்கு பெண்களுக்கான உரிமை போரிலும், மக்களின் விடுதலை போரிலும் தன்னையும் இணைத்து கவிதைகளை எழுதியதுடன் வீடு வீடாக சென்று பாரதியார் பாடல்களை பாடி புரட்சி தீயினை வளர்த்தார். இவர் மாறுவேடம் பூண்டு நடாத்திய பத்திரிகைகள் தேச நேசன், தேச பக்தன், உரிமைப்போர், தொழிலாளி, சுதந்திர போர் என்பனவாகும்.

இவர்களின் வழித்தோன்றல்களாக இன்றைய பெண் ஊடகவியலாளர்கள் விளங்குகின்றனர். சவால் மிக்க இன்றைய ஊடக துறையில் இவர்களின் பணி மெச்சத் தக்கது. இன்றைய நாளில் பெண் ஊடகவியலாளர்கள் சாதிப்பதை விட சவால்களையே அதிகம் சந்திக்கின்றனர். பாலியல் ரீதியான அழுத்தங்கள், ஆணாதிக்கம் என்பன இவர்களை கட்டுப்படுத்தும் காரணிகளில் முதன்மை பெறுகின்றன. இருப்பினும் இவை அனைத்தையும் தமக்கான பாதுகாப்பு வேலிகளாக கொண்டு இத் துறைகளில் சிறப்பாக பணியாற்றிவரும் பெண்களை நாம் பாராட்டியேயாக வேண்டும்.

பெண்கள் மென்மையானவர்கள் மட்டுமன்றி மேன்மையானவர்கள் அதனை நாம் உணர வேண்டும். மோசமான படைப்புகள் பல பெண்களின் புனை பெயர்களின் வெளிவரும் இன்றைய சவால் மிகுந்த காலத்தில் இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு பெண்கள் இலக்கிய படைப்பாற்றலிலும், ஊடகத்துறையிலும் தொடர்ந்து சாதிக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பாகவும் அமைகின்றது.

சி.ஜனகன்



# வண்ணங்களாகிய எண்ணங்கள்



துவாரகி.என்

"அக்கா கமராவ தாங்க எங்களுக்கும் படம் எடுக்கத் தெரியும் தாங்கக்கா என்றபடி என் கமராவை தன் வசப்படுத்த ஒருவனும் அக்கா அவனுக்கு குடுத்தா எனக்கும் தாஙம் என்று இன்னுமொருவனும். ஆம் இவர்கள் சாவகச்சேரி மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் மாணவச் செல்வங்கள்.


யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையமும் சுவிஸ் நாட்டின் தன்னார்வுத் தொண்டு நிறுவனமும் (SDC) இணைந்து "எனது உலகு" என்ற தொனிப் பொருளில் புகைப்பட பயிற்சிப் பட்டறை மற்றும் புகைப்பட கண்காட்சியை நடாத்தியிருந்தன. பிரபல புகைப்பட பிடிப்பாளரும் பண்பாட்டுப் படைப்பாளியுமான ஜோயல் சேம்ஸ் என்பவரது வழிகாட்டலிலேயே இது இடம் பெற்றது. மீள் குடியேற்ற கிராமமான மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயத் தைச் சேர்ந்த தரம் மூன்று தொடக்கம் ஐந்து வரையான இருபது மாணவர்கள் புகைப்படக்கருவியை கையாளுதல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்களால் புகைப்படக் கருவியை கையாளுதல் தொடர்பான பயிற்சி வழங்கப் பட்டது.அதன் பின்பு மாணவர்கள் தாமாக புகைப்படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். யுத்தத்தால் ஏதோவொரு விதத்தில் பாதிக்கப் பட்ட அந்தச் சின்னஞ் சிறார்கள் அனைத்தையும் மறந்து சிட்டுக் களாக பறந்து தாம் விரும்பியது அனைத்தையும் புகைப்படக் கருவியில் பதித்துக் கொண்டனர். தம் கிராமத்தினை சென்று தம் கிராமத்தின் சுவடுகளையும் நிழலாக்கிக் கொண்டனர். தாம் கற்பித்த மாணவர்கள் தம் கண்முன்னே அழகிய புகைப்படங்களை எடுத்துக் கொண்டதை கண்ணூடு கண்ட ஊடக மாணவர்களது மகிழ்ச்சிக்கு அளவில்லை.

இவ்வாறு மாணவர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் தெரிவு செய்யப்பட்ட படங்கள் பிரதி எடுக்கப்பட்டு மீண்டும் மாணவர் கரங்களில் ஒப்படைக் கப்பட்டன. தம்மால எடுக்கப்பட்டதை ஆர்வத் துடனும் ஆச்சரியத்துடனும் பார்த்தனர். ஆரம்பத்தில் உற்சாகம் இழந்திருந்த மாணவர்கள் கூட தாம் எடுத்த புகைப்படங்கள் தம் கரங்களில் தவழ்வதால் தம்மை அறியாமலேயே உற்சாகத் துடன் காணப்பட்டனர். மாணவர்கள் தாம் எடுத்துக் கொண்ட புகைப்படங்களின் மேல் தாம் விரும்பியதை வரையுமாறு அறிவுறுத்தப் பட்டனர். யாருமே இப்படியெல் லாம் எண்ணி இருக்க மாட்டார்கள்.

இவர்களது ஆழ்மனது சிந்தனைகள் அனைத்தும் வரைபடமாக மாறியது. ஆம் இதில் பங்குபற்றிய ஒவ்வொரு சிறுவர்களும் தமக்கான ஒரு உலகை சாதாரணமாக அல்ல புதிய உலகாக எதிர்பார்க் கின்றனர் என்பது வரைபடங்களாக புலனாகியது.

காய்ந்த மரத்தை தளிர்க்கச் செய்தும், தண்ணீர் அற்ற கிணற்றுக்குள் தண்ணீரை உருவாக்கியும், கூரை இழந்த வீட்டிற்கு கூரை அமைத்தும், வீட்டிற்கு வர்ணம் தீட்டியும், தன் வீட்டை சூழ தோட்டம் அமைத்தும், வீதிக்கு தார் போட்டும், வீதி நிறைய வாகனங்கள் செல்வதுமாக தமக்கு எதுவெல்லாம் தேவையாக இருந்ததோ, எவையெல்லாம் அவர்கள் எண்ணமாக அமைந்ததோ அவற்றை தாம் எடுத்துக் கொண்ட புகைப்படங்களில் இணைத்து வரைந்து கொண்டனர்.

மாணவர்கள் வரைந்து கொண்ட படங்கள் அத்தனையும் அவர்கள் கிராமத்தின் பழைய கட்டிடங்கள், மதில்கள், கிணறுகள், வீதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை மாணவர்களால் வரையப்பட்டன. தாம் வரைந்த வரைபடங்கள் தமது கிராமத்தை அலங்கரித்ததைக் கண்ட மாணவர்களது மகிழ்விற்கு அளவில்லை.
இதன்பின்பு மாணவர்களது புகைப்படங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டன. மறவன்புலோ



கிராமத்தை சுற்றியுள்ள ஏனைய பாடசாலைகளின் மாணவர்களும் அக்கிராமத்தவர்களும் போக வேண்டும் என்று பிஞ்சு மனது எண்ணுகின்றது. அவை அத்தனையும் மாணவர்களின் எண்ணங்களின் வண்ணமாக வெளிப்பட்டன.
உண்மையிலேயே இவர்கள் புதிய உலகத்தை நிச்சயம் அடைவார்கள் என்பது அவர்கள் ஆர்வத்தில் வெளிப்பட்டது. மாணவர்களின் எண்ண வெளிப்பாட்டை உணர்ந்து கொண்டனர்.
மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அழகான பறிற்சி மாணவர்களின் அற்புதமான சிந்தனை புகைப்படங்களில் வெளிப்பட்டது.
மாணவர்கள் தாம் இருக்கும் உலகத்தை விட்டு புதியதொரு உலகத்தை தேடுகின்றார்கள். யுத்தத்தின் வடுக்கள் மறைந்து போக வேண்டும் என்று பிஞ்சு மனது எண்ணுகின்றது.
அவை அத்தனையும் மாணவர்களின் எண்ணங்களின் வண்ணமாக வெளிப்பட்டன.
உண்மையிலேயே இவர்கள் புதிய உலகத்தை நிச்சயம் அடைவார்கள் என்பது அவர்கள் ஆர்வத்தில் வெளிப்பட்டது.



இலங்கையில் ஐரோப்பியரால் அமைக்கப்பட்ட கோட்டைகளில் கடலின் மத்தியில் அமைந்து அழகிய தோற்றத்தை வழங்கும் ஊர்காவற்றுறை ஹமீன்ஹீல் கோட்டை வரலாற்றில் முக்கியமான ஒரு இடம். இக் கோட்டை ஊர்காவற்துறை காரைநகரினை பிரிக்கும் ஆழமான கடலின் மத்தியில் போர்த்துக்கீசரினால் கட்டப்பட்டுள்ளது. இது இன்று ஹம்மன்ஹீல் என்றும் பூதத்ததம்பி கோட்டை என்றும் அழைக்கப்படுகிறது.


ஊர்காவற்துறைக்கு **kayts** என்று வழங்கப்படும் பெயர் **kays** என்ற போத்துகேய சொல்லில் இருந்து வந்ததாக கருதப்படுகிறது.

இச் சொல் துறைமுகம் அல்லது துறைமுக மேடை என பொருள்படும். கீ என்று உச்சரிக்கப்படும் **Quay** என்ற ஆங்கில சொல் இதற்கு சமமானது.

யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றி ஆட்சி செய்த போது ஊர்காவற்றுறை கோட்டையினை மாற்றியமைத்து தற்போதைய வடிவத்தினையும் பெயரையும் பெற்றது.


இக்கோட்டையானது ஒல்லாந்தர் காலத்தில் நாட்டைப் பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டது. இது முதன்முதலில் அமிநால் டெமென்சிஸ் என்ற போர்த்துக்கேய தளபதியால் 17 ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

பாக்கு நீரிணையூடாக சென்ற பண்டைட்டு கடற்பாதையில் இருந்து யாழ்ப்பாண பரவைக் கடலில் நுழையும் வழியை அரண் செய்தது இக் கோட்டை. வடக்கில் கோடிக்கரைக்கோ, நாக பட்டணத்துக்கோ போய், அங்கிருந்து கிழக்காக, பத்தாவது அகலக் கோட்டை பின்பற்றி தென்கிழக்காசியாவுக்கும், சீனாவுக்கும் போகலாம். நேர் வடக்கில் இந்தியாவின் கிழக்கு கரையோரமாக எந்த துறை முகத்திற்கும் போக முடியும் மேற்கு திசையில் தொண்டி, அதிராம் பட்டிணத்திற்கும் தென் கிழக்கிற்கு யாழ்ப்பாணத்திற்கும் போகலாம்.



# ஊர்காவற்துறை கடற்கோட்டை

பா.கஸ்ரோ




இக் கோட்டையானது பன்றியின் கால் வடிவத்தில் அமைந்துள்ளது. ஒல்லாந்தரால் சிறந்த முறையில் பேணி பாதுகாக்கப்பட்ட இக்கோட்டை 1795 இல் பிரிட்டிஸ்காரர்கள் கைப்பற்றிய பிற்பாடு சிறைக்கூடமாகவும், மருத்துவ நிலையமாகவும் பாவிக்கப்பட்டு வந்தது. கடலில் கப்பல் மூலம் போவோர் வருவோருக்கு நுழைவுச்சீட்டு இக்கோட்டையில் வைத்து வழங்கப்பட்டது. நாட்டிற்கு கப்பல் மூலம் வரும் பகையிலிருந்து நாட்டை இக்கோட்டை காத்து நின்றது. இங்கு வைத்து கப்பல்கள் ஆராய்ந்து சோதனை செய்யப்பட்டது.
இதே வேளை இந்தியாவில் இருந்து குடியேறு பவர்களை பொது சுகாதாரத்திற்கு என்று தனிமை ப்படுத்தும் நிலையமாகவும் இக் கோட்டை விளங்கியது. சில காலம் இது தொல்லியல் திணைக்களப் பொறுப்பில் இருந்தது. இங்கு பிரிட்டிஸ் காலத்தில் சிறைக்கூடமாக பயன்படுத்தப்பட்ட இக்கோட்டையில் ஆயுள் தண்டனை கைதிகளே சிறைப்படுத்தப் பட்டார்கள். ஆங்கிலேயர் காலத்தில் ஊர்காவற்றுறை முக்கிய கடற்படைத்தளமாக விளங்காத போதும் பிரதான சுங்கப் பரிசோதனை நிலையமாக விளங்கியது.

உல்லாச பயணிகளை கவரும் இடமாக இது இருந்த போதிலும் இக் கடற்கோட்டையை தூரத்தில் நின்றே பார்க்க முடியும். இக் கோட்டையினை பார்வையிட செல்வோர் முன்னரே பாதுகாப்பு தரப்பினரிடம் அனுமதி பெற வேண்டும்.


அங்கிருக்கும் படகினை ஒழுங்கு செய்து கடற் கோட்டையினை உல்லாசமாக சுற்றி பார்க்க முடியும்.

இது யாழ் நகரத்தில் இருந்து 25 கிமீ தூரத்தில் அமைந்துள்ளது. இதற்கான பயணவழியாக 780 இலக்க பேருந்தில் யாழ்ப்பாணம் – அல்லைப்பிட்டி – மண்கும்பான் – வேலணை – நாரந்தனை – புளியங்கூடல் போன்ற இடங்களை தாண்டி ஊர்காவற்துறையை சென்றடைய முடியும். இப் பாதையின் ஊடாக செல்லும் போது சாட்டி கடற்கரையின் புதிய அனுபவத்தையும் கண்டு உணர முடியும். குறைந்த நிமிடத்தில் 777 இலக்க பேருந்தில் இருந்து யாழ்ப் பாணம் – அல்லைப்பிட்டி – மண்கும்பான் – அராலி ஊர்காவற்துறையை சென்றடைவதோடு, 782 இலக்க பேருந்தில் இருந்து யாழ்ப்பாணம் – காரைநகர் கடல் வழிளுப்பாதையூடாக மிக விரைவாக ஊர்காவற்றுறையை சென்றடையாலம்.
இருந்தும் 777 இலக்க பேருந்தில் பயணிக்கும் போதே 45 நிமிடத்தில் ஊர்காவற்த்துறை கோட்டைக்கு சென்றடையலாம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை அழகுடன் கடலின் மத்தியில் கம்பீரமான தோற்றத்தோடு உல்லாச பயணிகளை பார்த்தவுடன் கவரும் ஒரு இடமாக காட்சி அளிக்கின்றது. வரலாற்று பொக்கிசமாக இது விளங்கி நிற்கிறது என்றால் மிகையாகாது. ஆனால் என்னதான் நீங்கள் முயற்சி எடுத்தாலும் நீங்கள் கோட்டைக்குள் பிரவேசிக்க முடியாது. அங்கு பாதுகாப்பு தரப்பினர் அக்கோட்டையில் இருந்து கடற் கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர்.



# நிர்க்கதியாகிய அன்னை..




"நான் படிச்ச பள்ளிக்கூடம் எப்படியாவது திரும்ப நல்ல நிலைக்கு கொண்டு வந்திடனும்" என்றார் தனங்கிளப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பரமேஸ்வரன்.

சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில் இருந்து 1999 டிசம்பரில் இடம்பெயர்ந்து சென்ற மக்கள் தற்போது மீளக்குடியேறி வருகின்றனர். இப்பகுதியில் இயங்கிய பாடசாலையே தனங்கிளப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. 2011ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடி யேறிய பின்னர் 2011ஆம் ஆண்டு யூலை மாதம் இப் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. மீள ஆரம்பிக்கப்பட்டது என்றதும் வசதிவாய்ப்புடன் மீள ஆரம்பிக்கப்பட்டதென்று நாம்



நினைத்துவிடக் கூடாது. எந்தவித அடிப்படை வசதியும் அற்ற நிலையில் இடிபாடுகளுடன் கூடிய தனியார் ஒருவரது வீட்டிலேயே இப் பாடசாலை இயங்கிவருகின்றது. தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான பதினாறு மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றனர். ஆரம்ப வகுப்பு மாணவர்கள் என்பதால் அடிப்படை வசதி என்பது எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. முக்கியமாக மலசலகூட வசதியின்மை பெரும் பிரச்சனையாக உள்ளதாக அதிபர் கூறினார். மலசலகூட வசதியின்மையால் தேவை ஏற்படும் நேரத்தில் மாணவர்களை வீட்டிற்கு அனுப்புவதாக கவலையுடன் கூறினார். பல்வேறு தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களுக்கும் அரச திணைக்களங்களுக்கும் தெரியப்படுத்தியும் தமக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லை என்றார்.

மக்கள் மீளக்குடியேற ஆரம்பித்த பின்னர் தத்தம் வீடுகளை புனரமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பாடசாலை இயங்கிவரும் வீடும் தனியார் ஒருவரின் வீடு என்பதால் அவர்கள் தம் வீட்டினை புனரமைப்புச் செய்ய ஆரம்பித்து விட்டனர். இதனால் தொடர்ந்தும் இவ் வீட்டில் பாடசாலையை இயக்க முடியாத சூழல்



உருவாகியுள்ளது. தற்காலிக மானதொரு கொட்டகையானது தமக்கு அவசியம் தேவைப்படுவதாக அதிபர் ஆதங்கமாக கூறினார்.

இரண்டு நிரந்தர ஆசியர்களும் ஒரு தற்காலிக ஆசிரியரும் கல்வி கற்பிக்கின்றனர். வசதியின்மை காரணமாக மாணவர்களை பாடசலையில் இணைத்துக் கொள்வதற்கு பெற்றோர் தயக்கம் காட்டி வருகின்றனர். இப் பாடசாலையின் கட்டடம் முற்றாக சேதமடைந்த நிலையில் தற்போது காணப்படுகின்றது.

எத்தனையோ சிறார்களை தன் மடியில் சுமந்த இப் பாடசாலை அன்னை இன்று நிர்க்கதியாக் கப்பட்டுள்ளாள். வீதிகளை விசாலமாக்குவதில் அக்கறை காட்டிவரும் அரசு கண்ணான கல்வியை கொடுக்கும் பாடசாலையை புனரமைக்கத் தவறிவிட்டது. தமக்கான நிலம் இருந்தும் அதில் ஒரு குடிலைப் போட்டு தம் வசதிக்கேற்ப கற்கும் வாய்ப்புக் கூட இச் சிறுவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இப் பாடசாலையை வெகு விரைவில் புனரமைத்தால் அல்லது தற்காலிகமானதொரு குடிலை இவர்களுக்கு அமைத்துக் கொடுத்தால் அவர்களது கல்விச் செயற்பாடு சிதறாமல் கலையாமல் தொடர்வதற்கு வாய்ப்பாக அமையும். அரச தரப்பினரோ அல்லது தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களோ இதனைக் கவனத்தில் கொண்டு இப் பாடசாலையை மீளமைத்துக் கொடுத்து மாணவர்களது கல்விக்கு வழி கோல வேண்டும்.

ஜவாஜி.என்



யாழ்ப்பாண ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் மாணவர்கள் இயக்குனர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுடன்

# கண்டு கொள்வார்களா?



நம்மிடையே விடுபட்டுச் சென்ற பழமைகளையும் பாரம்பரியங் களையும் தன்னகத்தே இருப் பெடுத்து காத்தல் செய்யும் அளப்பெரிய சேவையை மக்களுக்கு வழங்குவன நூதன சாலைகள்.

யாழ்ப்பாணத்தில் கண்டெடுக் கப்பட்ட அரும் பொருட்களை ஓரிடத்தில் குவித்து வைத்திருக் கிறது யாழ்ப்பாண அரும் பொருளகம். இங்கு வைக்கப் பட்டிருக்கும் அரும்பொருட்கள் சட்டநாதர் கோயில், யமுனா ஏரி,கந்தரோடை ஆகிய இடங்களில் இருந்து பெறப் பட்டவையாக கூறப்படுகின்றது. இவற்றில் அநேகமானவை பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டை சார்ந்தவைகள். காட்சிக்கூடங்கள் எந்த வகையிலும் வகுக்கப்படவில்லை சிற்பங்கள், செதுக்கல்கள், ஓவியம், கைவினைப் பொருட்கள், மரபுச்செத்துக்கள் கல்வெட்டுக்கள், அகழ்வாராச் சியில் கிடைத்த பொருட்கள் அனைத்துமே இடவசதிக்கேற்ப காட்சிப்படுத் தப்பட்டுள்ளனவே தவிர ஒழுங்கு படுத்தப்படவில்லை.

பல அரும் பொருட்கள் அங்கிருந்து அநுராதபுரம், பொலநறுவை நூதன சாலைகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன. இங்கே இருக்கும் சிலவற்றின் காலம் கண்டெடுக் கப்பட்ட இடங்கள் என்பன அறியப்படவில்லை. இங்கு பல கூடங்கள் வெறுமையாக காணப்படுவதுடன் காட்சிப் படுத்தலில் வைக்கப்பட்டுள்ள அரும் பொருட்கள் எந்தளவிற்கு பாதுகாக்கப்படுகின்றது என்ற கேள்விக்கு விடையில்லை.

கலைப் பொருட்கள் தன் கலைத் துவத்தை மட்டும் சொல்லி நிற்பதல்ல அதன் வரலாற்றையும் அதன் தோற்றத்தில் பங்கெடுத்த மக்களையும் அவர்கள் தம் வாழ்வியலையும் பேசி நிற்கின்றது. விளிம்பு நிலைப்படுத்தப்பட்ட வரலாறு எழுதப்படாமலேயே போவது போல் இங்குள்ள அரும் பொருட்களுக்கு அளிக்கப் படும் விளக்கங்களும் வருகை தருபவர்களுக்கு ஏற்ப வேறுபடுத் தப்படுகின்றன.

நாவலர் வீதியில் அமைந் திருக்கும் யாழ்ப்பாண அரும் பொருளகம் யாழில் எத்தனை பேருக்கு தெரிந்திருக்கும் என்பது வினாவிற்குரியதே. வெளிமாவட்டத்தவரும் வெளிநாட்டவரும் பார்வையிடும் ஓர் இடமாக மத்திரமே யாழ். நூதனசாலை விளங்குகின்றது. கிட்டத்தட்ட பன்னிரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அரும் பொருட்கள் காட்சிப்படுத்தப் பட்டிருப்பினும் நூதன சாலைக்குரிய பண்புகளை தன்னகத்தே கொண்டுவர தவறியுள்ளது. வரலாற்றை பிரதிநிதித்துவப்படுத்துவது கலைப் பொருட்களும் கலைப் பொருள்சார் சான்றுகளுமே. அச்சான்றுகளை பாதுகாப்பது மட்டுமல்ல அவற்றை மக்கள் மத்தியில் நிலைக்கச் செய்வதாலுமே அரும்பொருட் காட்சிச் சாலையின் சேவை பூர்த்தி செய்யப்படும். இதனை உரியவர்கள் கவனத்தில் கொள்வார்களா?

வித்யா.இ



# விரலுக்கேற்ற வீக்கம்


படிப்படியான அபிவிருத்தியை போக்குவரத்துத் துறையில் கண்ட யாழ்ப்பாணம் 2009க்கு பின்னர் கண்ட அபிவிருத்தி மிகவும் முக்கியமானது. யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டன. வீதி அபிவிருத்தி, வீதி அகலமாக்குதல் முதலிய பணிகள் ஒரு புறத்தில் இடம்பெற இவ்வீதிகளில் பயணம் செய்வதற்கென பலதரப்பட்ட வாகனங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தன. அந்த வாகனங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களும் பெருமளவில் உருவாகின. புதிய ரக கார்கள், பாரவூர்திகள், சிற்றூர்திகள் என்பவற்றுடன் மோட்டார் சைக்கிள்களின் விற்பனையும் குடாநாட்டில் அதிகரிக்க ஆரம்பித்தது. ஏனைய வாகனங்களின் பாவனையுடன் ஒப்பிடுகையில் மோட்டார் சைக்கிள்களின் பாவனை மக்களிடையில் மிக விரைவாக அதிகரித்தது. TVS, Hero Honda, Bajaj நிறுவனங்களின் தயாரிப்புகள் பெரிதும் வரவேற்பைப் பெற்றன. வெவ்வேறுபட்ட வர்த்தக பெயர்களுடனும், கதி வேறுபாடு, இயந்திர வேறுபாடுகளுடனும் இளைஞர்களை கவரும் மோட்டார் சைக்கிள்கள் பாவனைக்கு வந்தன. இளைஞர்கள் மட்டுமன்றி யுவதிகளின் பாவனைக்கான மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்கு வந்தன. இவற்றை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்ததும் வர்த்தக நிறுவனங்களும் தமது வியாபாரத்தை கிளைகள் அமைத்து விரிவுபடுத்தின.

**தமது பயணத்தை இலகுவாக்குவதற்காக மோட்டார் சைக்கிள்களை வாங்க ஆரம்பித்த மக்கள் தற்போது கைத்தொலைபேசி பாவனை போன்று ஆளுக்கொரு மோட்டார் சைக்கிள்களை பாவிக்கும் நிலைக்கு வந்துள்ளனர்.**



சி.ஜனகன்


இதனால் யாழ் நகரத்திற்கு அப்பால் சுன்னாகம்,நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி முதலிய சிறு நகரங்களிலும் வியாபாரங்கள் ஆரம்பித்தன. இவற்றின் விஸ்தரிப்பிற்கும், கொள்வனவு அதிகரிப்பிற்கும் காரணமாக இருந்தவைகளை பார்த்தோமானால், இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிக்க ஆரம்பித்தன. சர்வதேச நிறுவனங்கள், அரச நிறுனங்கள், வங்கிகள் என வேலைவாய்ப்பைத் தேடி இளம் சமுதாயம் படையெடுக்க ஆரம்பித்தது. இந்த வேலைத்தளங்கள் பெரும்பாலும் நகர்ப் பகுதிகளில் இருக்கின்றமையால் போக்குவரத்திற்கு பேருந்துகளை ஆரம்பத்தில் இவர்கள் நாடியிருந்தனர். ஆனால் வேலைக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்ததும் பேருந்துகளில் சன நெருக்கடி ஆரம்பித்தது. இதனால் காலை நேரத்தில் வேலைக்குச் செல்லும் போது மனநிம்மதியுடன் செல்ல வேண்டும் என்ற நிலை இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டது. அப்போது அவர்களின் மாற்றுத்தெரிவாக மோட்டார் சைக்கிள்கள் அமைந்தது. ஏனைய வாகனங்களுடன் ஒப்பிடுகையில் பாவனைக்கு இலகுவாகவும், மலிவாகவும் இருந்தமையும் இதற்கு ஒரு காரணம்.




குடும்பத்தில் தற்போது குறைந்தது ஒரு மோட்டார் சைக்கிளாவது இருக்கும் நிலை தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது. சில குடும்பங்களில் அக்குடும்பத்தில் இருக்கும் அங்கத்தவர்கள் குறிப்பாக இளைஞர்களின் எண்ணிக்கைக்கேற்ப மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இது போக்குவரத்து துறை சார்பில் நோக்கும் போது வரவேற்கத்தக்க அபிவிருத்தியாக காணப்பட்டாலும் இந்த அபிவிருத்தியில் மற்றுமொரு விடயம் தாக்கம் செலுத்துகின்றது. அது என்னவென்றால், ஒருவரை பார்த்து அவரைப் போல் தானும் வாழ வேண்டும் என்கின்ற எண்ணம். இந்த எண்ணம் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களைத் தேவைகளின் அடிப்படையை கடந்து நாகரீகப் போக்கு என்ற நிலைக்குள் அழைத்துச் சென்றது – செல்கின்றது. இதனால் தங்கி வாழும் இளைஞர்கள் மத்தியில் பிரபல்யமடைய தொடங்கி வீடுகள் தோறும் மோட்டார் சைக்கிள்கள் நுழைந்து கொண்டன.

இந்த நிலை நடுத்தர வருமானத்தை பெறும் குடும்பங்கள் மத்தியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பிக்கின்றன. சராசரியாக வருமானம்பெறும் ஒருவரது குடும்பச் செலவுகள், ஆடம்பரச் செலவுகள் என அனைத்தும் கழிய மாத இறுதியில் அவர்கள் கையில் மிஞ்சும் பணம் மிகக் குறைவு. அதே நேரத்தில் செலுத்த வேண்டிய கடன் தொகை அதிகரித்தும் காணப்படும். இது சாதாரணமாக குடும்பத்தில் ஒருவர் மோட்டார் சைக்கிள் வைத்திருந்தால் அவரின் மாதாந்த வரவு செலவு நிலை. ஒருவருடைய வருமானத்தில் வாழும் குடும்பம் என்றால் அந்த குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் பாவனை இருக்குமானால் எரிபொருளுக்காக செலவளியும் பணத்தினை எண்ணிப்பாருங்கள்..!

**‘இப்போது அனைத்தும் விலையேறி விட்டன. கை நிறைய சம்பாதிச்சாலும் கடன் இல்லாமல் வாழ முடியவில்லை’**





> **'25,000 ரூபாய் வருமானம் பெறும் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளின் எரிபொருளுக்காக மாதம் குறைந்தது 5000 ரூபாய்களை ஒதுக்குகின்றார்.'**

சராசரி வருமானம் பெறும் ஒருவர் தனது மோட்டார் சைக்கிள் பாவனை மற்றும் பராமரிப்புக்காக செய்யும் செலவுகளையும், தங்கி வாழும் இளைஞர் ஒருவர் தன் மோட்டார் சைக்கிளிற்கு செய்யும் செலவுகளையும் கீழே அட்டவணையில் காணலாம்.

| | வருமானம் (Rs) | எரிபொருள் செலவு (Rs) | மோ.சைக்கிளிற்கான இதர செலவுகள் (Rs) | மொத்த செலவுகள் (Rs) | மிகுதிப் பணம் (Rs) |
|---|---|---|---|---|---|
| வருமானம் பெறும் நபர் | 60,000 | 18,000 | 2000 | 20,000 | 40,000 |
| தங்கி வாழும் நபர் | - | 20,000 | 3,500 | 23,500 | - |

(மூன்று மாதங்களை அடிப்படையாக கொண்டு சராசரியாக கணிக்கப்பட்டது)

மோட்டார் சைக்கிள்களின் பராமரிப்புச் செலவுகள், அதனை அழகுபடுத்தும் செலவுகள் உட்பட எரிபொருள் செலவுகள் என பெரும் தொகையான பணம் மாதந்தோறும் செலவழிக்கப்படுகின்றன. அதிகரித்து செல்லும் எரிபொருள் விலையேற்றம் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் மத்தியில் உருவாக்கும் தாக்கம் அவர்களின் குடும்பம் வரை தாக்கம் செலுத்துகிறது. வேலைக்குச் செல்லும் இளைஞர் ஒருவர் தனக்கு வரும் வருமானத்தில் ஒரு பகுதியை தனது வாகனத்திற்கான எரிபொருள் செலவிற்காக ஒதுக்கி விடுகின்றார். உதாரணமாக, 25,000 ருபாய் வருமானம் பெறும் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளின் எரிபொருளுக்காக மாதம் குறைந்தது 5000 ருபாய்களை ஒதுக்குகின்றார். மிகுதி பணத்தில்தான் அவருடைய குடும்பத்தின் இதர அன்றாட செயற்பாடுகள் நகர்கின்றன.

கணனி கற்கை நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் தன்சயன் குறிப்பிடுகையில், 'எனது 3 மாத வருமானம் 45,000 ருபாய்கள். இதில் 22,000 ருயாய்கள் மோட்டார் சைக்கிள் பாவனைக்காக செலவு செய்யப்படுகின்றன. மிகுதி பணத்தில்தான் என் குடும்ப வாழ்க்கை நகர்கின்றது. அதுவும் இப்போது அனைத்தும் விலையேறி விட்டன. கை நிறைய சம்பாதிச்சாலும் கடன் இல்லாமல் வாழ முடியவில்லை' என வருத்தப்படுகின்றார்.

'அதிகரித்திருக்கும் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட இதர விலையேற்றங்கள் என்பன, கிடைக்கும் வருமானத்திற்குள் குடும்பத்தை நடாத்துவதற்குத் தடையாக இருக்கின்றன. ஆனால் இந்தச் செலவுகளை மட்டுப்படுத்தினால் கடன் சுமையை குறைத்துக் கொள்ளலாம். அது மட்டுமன்றி இளைஞர்கள் தமது வருமானத்தின் ஒரு பகுதியையாவது சேமித்து வைத்திருக்க வேண்டும். அந்தச் சேமிப்பு எதிர்காலத்தில் அவர்கள் குடும்ப பொறுப்பினுள் நுழையும் போது உதவியாக இருக்கும்' என்று கூறுகின்றார் பொருளியல் துறை ஆசிரியர் சிவராஜா.

எனவே ஒரு துறையின் அபிவிருத்தி ஏனைய துறைகளின் அபிவிருத்திகளை பாதிக்காமல் இருக்க வேண்டியது அவசியமாகும். மோட்டார் சைக்கிள்களின் பாவனை அதிகரித்திருப்பது போக்குவரத்து துறையில் பாரிய அபிவிருத்தியாக இருந்தாலும் அதற்கு செலவழிக்கப்படும் பணம் குடும்பத்தின் ஏனைய அபிவிருத்திகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பது வருந்தத்தக்கது.
ஆகவே இளைஞர்கள் தமது வருமானத்தினை அதிகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன், வேலையற்ற இளைஞர்கள் முதலில் தமக்கான வருமானத்தை உறுதி செய்த பின்னர் வாகனங்களை வாங்கும் செயற்பாட்டில் இறங்கலாம்.
இது நிலையான அபிவிருத்தியை உறுதி செய்வதுடன் நாட்டிற்கும் வீட்டிற்கும் உதவியானதாகவும் அமையும்.



# யாழ்ப்பாண கள்ளு "மிச்சம் நல்லம்"


பா.கஸ்ரோ

யாழ்ப்பாணம் இலங்கைத் தீவின் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியம்.
இதனுடைய கலாசாரங்கள், பண்பாடுகள், வாழ்க்கை கோலங்கள் சிறப்பானவை.
இவையே இன்று வரைக்கும் யாழ்ப்பாணத்தின் தனித்துவத்தினைப் பேணிப் பாதுகாக்கின்றன என்று கூறலாம்.

யாழ்ப்பாணத்தின் சின்னமாக அடையாளப்படுத்தப்படுவது பனை வளமே.
இந்தப் பனை வளத்தில் இருந்து பெறப்படுவது கள்ளு. இதனுடைய மருத்துவக் குணம் யாழ்ப்பாண மக்களால் மட்டுமல்ல தென் பகுதி மக்கள், புலம்பெயர்ந்தோராலும் அதி முக்கியத்துவமிக்கதாக பேசப்பட்டு வருகின்றது.
யாழ்ப்பாணக் குடா நாடு இப்போது ஒரு சுற்றுலா தளமாக மாறிக்கொண்டு வருகின்றது. பல இடங்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்தவையாக மாறி விட்டன.



யாழ்ப்பாணத்தின் தொன்மைகள், அதனுடைய அழகை, உணவு முறைகளை அனுபவிப்பதற்கு நாள் தோறும் படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள் அதிகம்.
யாழ்ப்பாணக் காலநிலை எப்போதும் ஒரு வெப்பமானது. அந்த வெப்பமான காலநிலையில் உடலின் வெம்மையை குறைப்பதற்க்கு கணிசமான தென்னிலங்கை உல்லாசப் பயணிகள், இந்த குடாநாட்டின் தனித்துவமிக்க பானமான கள்ளினையே நாடுகின்றனர்.
யாழ்ப்பாணக் கள்ளினை ஆய்வு செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இது ஒரு மதுபான வகையினை சார்ந்தது அல்ல என்றும் இது மென் பான வகையினை சார்ந்தது என்றும் கூறுகின்றனர்.



கள்ளுக்கு கீரிமலை கூவில் கிராமம் பிரசித்தி பெற்றது. இக்கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணியம் கூறும் போது,



"1990 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் கீரிமலை கோவிலுக்கு வரும் உல்லாச பயணிகள் அதிலயும் சிங்களவர்கள் இங்க வந்து கள்ளு வாங்கி குடிப்பாங்க அப்ப யாழ்ப்பாணத்தில இந்த கூவில் கிராமம் தான் கள்ளுக்கு பிரபலம். ஒரு நாளைக்கு 100 பேருக்கு மேல் வருவாங்க. இதைவிட யாழ்ப்பாணத்தில இருக்கிற எல்லா இடத்தில இருந்து அந்தியேட்டி கிரியை செய்வதற்க்காக கீரிமலை கோவிலுக்கு வருபர்களும் இங்க வந்து கள்ளு குடிச்சிற்று தான் போவாங்க. அந்த காலத்தில ஒரு போத்தல் கள்ளின் விலை 15 ருபா தான். கூவில் கிராமத்தில 60க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தன. எல்லாருமே சீவல் தொழில் தான் செய்வார்கள். இந்த தொழிலினைப் பரம்பரைத் தொழிலாக கிட்டத்தட்ட ஐந்தாறு தலைமுறை கடந்து இத்தொழில் செய்யிறம். ஆனால் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்ததால் இப்ப இந்த கிராமத்தில சீவல் தொழில் செய்யுறது குறைஞ்சிட்டு.." என்றார்.

இந்த கிராமத்து கள்ளு ஏன் அதி சிறப்பு வாய்ந்தது என்றால் அல்லது மக்கள் ஏன் அதிகம் விரும்புறார்கள் என்றால், காரணம் கீரிமலை கடற்கரையின் மண் வள தன்மை. இதனால் கள்ளு அதிகம் பாணித் தன்மை கொண்டது. அதனால அதிகம் விரும்புறாங்க. இதை விட கள்ளு சீவுறவங்களின் திறமையும் இந்த கள்ளின் ருசிக்கு காரணம்.

'போட்டி போட்டுக்கொண்டு முந்தின காலத்தில பனை மரம் சீவுவம். ஒரு நாள்ளக்கு முப்பது மரம் ஏறுவம். நான் பதினேழு வயசில சீவல் தொழிலினை ஆரம்பிச்சனான். ஆரம்பத்தில நண்பர்களோடு சேர்ந்தே பனை மரம் ஏற பழகிக் கொண்டனான். புகையிரதம் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது தபால் கொண்டு வருகின்றவர்களும் அடிக்கடி கள்ளு குடிக்க வருவார்கள்.

மாசி, ஆவணி காலப்பகுதியில் தான் அதிகளவு கள்ளு பனையில உற்பத்தியாகும். அந்த காலத்தில உற்பத்தி அதிகமாகிறதால வருமானமும் கூடும்.' என்றும் கூறினார்.

**யாழ்ப்பாணக் குடா நாட்டின் பரம்பரைத் தொழிலில் இதுவும் ஒன்று. குடாநாட்டுக்கு வெளியே உள்ளவர்களில் இந்த கள்ளு உற்பத்தியினை பார்த்து பிரம்மிப்பு அடைபவர்களும் இருக்கின்றார்கள். இருந்தும் இத்தொழிலினை செய்கின்ற சமூகத்தை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்போரும் யாழ்ப்பாணத்தில் உள்ளனர்**

யாழ்ப்பாணக் கள்ளின் ருசி பற்றி தென்னிலங்கை சுற்றுலா பயணி பஸ்னாயக்கா கூறும் போது "எங்களுக்கு யாழ்பாணத்து மண்ணுமேல இருக்கிற விருப்பத்தை விட யாழ்ப்பாண கள்ளின் மேல தான் அதிக விருப்பம். "மிச்சம் நல்லம்" தென் பகுதில இருக்கிற நம்மட ஆக்கள் வட பகுதி கள்ளினை தான் அதிகம் விரும்புவாங்க. இது ஒரு தனித்துவமான கள்ளு என்றதால இதில ஒரு கொள்ளைப்பிரியம். அதனுடைய சுவையினை பாக்கனும் என்று தீராத ஆசை ரொம்ப நாளா எங்களுக்கு. அது தான் எங்க குடும்பத்தோட யாழ்ப்பாணத்துக்கு வந்திட்டம்.

நாங்கள் வேலணை, கீரிமலை, தவறணைகளுக்கு போனால் முதலில கொஞ்சம் கள்ளினை எடுத்து ருசி பாப்பம் அதில கடுமையாக இனிப்பும் இருக்கக் கூடாது, கடுமையாக புளிப்பும் இருக்கக் கூடாது. அப்படி இருந்தா உடனும் வாங்கிக் குடிப்பம்.

எங்கட இடத்தில இருக்கிற கள்ளு இத்துள் கள்ளு. அதில பெரிதாக நாட்டம் கொள்ளுறது இல்ல. எங்களுக்கு யாழ்ப்பாண கள்ளில எப்படி ஆசை வந்தது என்றா? பனங்கள்ளு குளிர்மையாக இருக்கும் அதோட உடம்பையும் குளிராக வைச்சிருக்கும். அதை அறிஞ்சுதான் இங்க வந்தம். யாழ்ப்பாணத்துக்கு வந்தா சனி, ஞாயிறு தினங்களில் தான் கள்ளு தவறணைக்கு குடும்பத்தோட வருவம்.

எங்கட தென் பகுதியில இருக்கிற தென்னங்கள்ளு உடம்புக்குக் கூடாது. கித்துல்லா, இத்துல்லா என்று இரண்டு வகையான கள்ளு இருக்கு அது கொஞ்சம் தான் தென் பகுதில இருக்கு. அதனால அதுக்கு தனித்துவம் இல்ல. ஆனா யாழ்ப்பாணத்தில அதிகம் பனை தானே. இங்குள்ள கள்ளு இரத்ததை சுத்தமாக்க உதவியா இருக்கு. அதவிட நம்மட பசங்களுக்கு நாம இதைக் குடிக்க கொடுப்பம் ஏனென்றால் இதில மருத்துவக் குணம் இருக்குத் தானே. இதனால யாழ்ப்பாண கள்ளில அலாதி பிரியம்" என்றார்.





யாழ் மண்ணைப் பற்றியும், யாழ்ப்பாணத்தானைப் பற்றியும் இம் மண்ணை விட்டு போகும் போது நல்லதோர் அனுபவத்தினை பகிர்ந்து கொள்பவர்கள் யாழ்ப்பாணக் கள்ளின் சுவையினையும் கூற மறக்கமாட்டார்கள்.

பனை மரத்தில் இருந்து கள்ளு எடுக்கும் முறை பற்றி வேலணையைச் சேர்ந்த சந்திரன் கூறுகையில்,

“முதலில பனையினை பதப்படுத்துவம். பதப்படுத்திய பின்னர் அதில் இருந்து கள்ளு வருவதற்க்கு ஆறு நாட்கள் எடுக்கும். ஆறு நாட்களும் பாளையினைப் பதப்படுத்துகின்ற வேலை நடைபெறும். இதற்க்குப் பிறகு பாளையில் இருந்து கள்ளு வர ஆரம்பிக்கும் அந்தக் கள்ளினை முற் கள்ளு என்று சொல்லுவம் ஆனா அதனைப் பாவனைக்கு எடுக்கிறது இல்ல. பிறகு பதப்படுத்திய பாளைக்கு முட்டி கட்டுவம். மறு நாள் காலையில ஒரு போத்தல் அல்லது இரண்டு போத்தல் கள்ளினை எடுக்கக் கூடியதாக இருக்கும். பின்னர் அதனைத் தவறணையில் கொண்டு வந்து விற்பனை செய்வம்”.

யாழ்ப்பாணத்தில் அதிகமாகப் பனை வளம் கொண்ட பிரதேசங்களாக ஊர்காவற்துறை, பண்டத்தரிப்பு பிரதேசங்களே யாழ் அரச அதிபரினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதனை விட யாழ்ப்பாணத்தில் கள்ளுக்கு அதிக கிராக்கியினைக் கொண்டது கீரிமலையில் உள்ள “கூவில்” கிராமம். அத்தோடு ஊர்காவற்துறை, நெடுந்தீவு என்பனவும் கிராக்கியில் முன்னணியில் உள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் நடாத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது காலையில் பனை மரத்தில் இருந்து இறக்குகின்ற கள்ளில் அற்ககோல் நொதிப்பு தன்மை காணப்படாது. இந் நிலையில் இக் கள்ளினை மருத்துவ தேவைகளுக்கு பயன்படுத்தலாம். ஆனால் நண்பகல் 1.00 மணியினை தாண்டியவுடன் வளியின் தாக்கம் காரணமாக இக் கள்ளில் அற்ககோல் நொதிக்க ஆரம்பிக்கும். இவ் வேளையில் கள்ளினை வாங்கி குடிப்பவர்கள் அதனை அளவோடு பாவிப்பார்களானால் உடலுக்கு எத் தீங்கினையும் ஏற்படுத்தாது. ஆனால் அதிகமாக குடிக்கும் போது போதை நிலமைக்கு தள்ளிவிடும்.

தை, மாசி, பங்குனி மாதங்களில் இந்தப் பனங்கள்ளு சீசன் களை கட்டும். கள்ளினை சண்டை போட்டு வாங்குகின்ற நிலமையினை ஒவ்வொரு கள்ளுத் தவறணையிலையும் காணலாம். ஆனால் இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் யாழ்ப்பாணத்துக்கு வரும் வெளிநாட்டு வெள்ளை இனத்தவரும் குடா நாட்டு கள்ளினை ருசித்து பார்க்க தவறுவதில்லை.

யாழ் மாவட்டத்தினை பொறுத்த வரையில் அதிகமாக பல கீழ் மட்ட குடும்பங்களின் சுயதொழிலில் உழைப்பினை ஈட்டிக் கொள்வது இந்தக் கள்ளு உற்பத்தி தான் என்று கூறிக் கொண்டாலும் யாழ்ப்பாண மண்ணின் தனித்துவத்தில் கள்ளின் செல்வாக்கு அதிகம். இது அவர்களின் வாழ்க்கையோடு ஒன்றிப் பிணைந்ததாக உள்ளது. இக் குடா நாட்டின் மூல வளமான பனை அதன் அடியில் இருந்து நுனி வரை அனைத்துமே பயனுள்ள முடிவுப் பொருட்களையே மக்களுக்குக் கொடுக்கின்றது.










Print By : Noble printers. 0212220386